## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – கல்வி – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரின் கல்வி மேம்பாடு – தொடர்ந்து கல்வி பயிலும் எண்ணத்தை ஊக்குவிக்கும் பொருட்டு சென்னை உட்பட தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 3ம் வகுப்பு முதல் 6ம் வகுப்பு பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் / பழங்குடியின மாணவிகளுக்கு கல்வி ஊக்குவிப்புத் தொகை அளிக்கும் சிறப்பு திட்டம் – இத்திட்டத்தினை 7ம் வகுப்பு மற்றும் 8ம் வகுப்பு பயிலும் அனைத்து ஆதிதிராவிடர் பழங்குடியினர் மாணவிகளுக்கும் விரிவுபடுத்தி ஆணை வெளியிடப்படுகின்றது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந3) துறை

அரசாணை (நிலை) எண் : 69

நாள் :25.9.2013
விஜய புரட்டாசி 9, திருவள்ளுவர் ஆண்டு 2044
படிக்கப்பட்டது.

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் அவர்களின் கடிதம் எண். உ3/ 13485/2013 நாள் 28.05.2013

******

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 9.5.2013 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் பின்வரும் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> "1994–1995 ஆம் ஆண்டு நான் தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த போது துவக்கப்பட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியருக்கான கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 500 ரூபாயும், 6ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 1000 ரூபாயும் கல்வி ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களும் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி ஏழாம் வகுப்பு மற்றும் எட்டாம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு 1500 ரூபாய் ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படும். இதன் மூலம் 2 லட்சத்து 77 ஆயிரம் மாணவியர் பயனடைவர் ".

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆதிதிராவிடர் நல இயக்குநர், 2013 – 2014ஆம் ஆண்டு பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் 3ஆம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு ஒரு கல்வியாண்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.50/– வீதம் 10 மாதங்களுக்கு ரூ.500/–ம் 6ம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/– வீதம் 10 மாதங்களுக்கு ரூ.1000/– என ஊக்குவிப்பு தொகையாகத் தற்போது வழங்கப்பட்டு வருகிறது என்றும், சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழான மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில் 7 மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு ரூ.1500/– ஊக்குவிப்புத் தொகையாக வழங்க ஆணை வேண்டியும், இதற்கு 2012–2013ஆம் கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7 மற்றும் 8ஆம் வகுப்பு பயின்ற மாணவிகளின் (190032 மாணவிகள்) எண்ணிக்கையினை 2013–14ஆம் கல்வியாண்டிற்கும் உரிய எண்ணிக்கையாகக் கருத்திற் கொள்ளலாம் என்றும், அதனடிப்படையில் 1,90,032 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூ.28.51 கோடி (ரூபாய் இருபத்து எட்டு கோடியே ஐம்பத்து ஒன்று இலட்சம் மட்டும்) புதிய கணக்கு தலைப்பு ஒன்றினை உருவாக்கி அப்புதிய கணக்கு தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடுமாறும் அத்தொகையினை அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் தன்பெயர் வைப்புக் கணக்கில் பற்று வைத்து இத்திட்டத்தினைச் செயல்படுத்த அனுமதி வழங்குமாறும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியருக்கு 3ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றிற்கு ரூ.500/–ம், 6ஆம் வகுப்பு பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றிற்கு ரூ.1000/– மட்டும் வழங்கப்பட்டு வரும் பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தினை, 2013–14ஆம் கல்வியாண்டு முதல் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 7ஆம் வகுப்பு மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களுக்கும் விரிவுபடுத்தியும், 7ஆம் வகுப்பு மற்றும் 8ம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150/– வீதம் 10 மாதங்களுக்கு ரூ.1500/– வழங்கவும், இசெலவினத்திற்கு ரூ.28.51 கோடி (ரூபாய் இருபத்து எட்டு கோடியே ஐம்பத்து ஒன்று இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும், இதனை மாவட்டங்களின் தேவைக்கேற்ப சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலருக்கு பகிர்ந்தளிக்க ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி அளித்தும், பகிர்ந்தளிக்கப்படும் தொகையை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் தங்களின் தன் பெயர் வைப்புக் கணக்கில் (Personal Deposit) வைத்து செயலாக்க கீழ்க்கண்ட நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

I. இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஊக்கத்தொகையானது மாதம் ஒன்றிற்கு ரூ.150/– வீதம் (10 மாதங்களுக்கு) ஒவ்வொரு மாதத்தின் முடிவிலேயே வழங்கப்பட வேண்டும்.

II. மாணவிகளின் பெயரில் உள்ள வங்கி கணக்கு அல்லது மாணவிகளின் தாயாரின் பெயரில் தொடங்கப்பட்ட அஞ்சலக சேமிப்பு கணக்கிலேயே தொகை செலுத்தப்பட வேண்டும்.

III. அரசாணை (நிலை) எண்.102, நிதி(வசெ.1) துறை நாள் 29.3.2013-ல் ஆணையிடப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி 4 தவணைகளாக விடுவித்து செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

4. 2013-2014ம் ஆண்டு வரவு செலவு திட்ட வெளியீட்டு கோரிக்கை எண்.04-02ல் உள்ள "2225-01-277-JY ஆறாம் வகுப்பு பயிலுகின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவியரிடையே படிப்பறிவை வளர்க்க சிறப்பு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம்" என்ற கணக்கு தலைப்பின் பெயரினை [nomenclature] கீழ்க்கண்டவாறு "2225-01-277-JY ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலுகின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவியரிடையே படிப்பறிவை வளர்க்க சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம்" என்று மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3ல் உள்ள ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளில் பற்று வைக்கவும்:-

> 2225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -01 ஆதிதிராவிடர் நலன் -277 - கல்வி - பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்-II மாநிலத் திட்டம் - JY ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலுகின்ற ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவியரிடையே படிப்பறிவை வளர்க்க சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் - 39 வெகுமதிகள் (த.தொ.கு. 2225 01 277 JY 3901)

6. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புதுத்துணைப்பணி" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டப்பேரவையின் ஒப்புதலை பெறும் வரையில் முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப் படும். இதற்கான முன்பணத்தினை அனுமதிக்கும் ஆணை நிதி (வசெ.-I) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெற தேவையான விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலினையும் இணைத்து நிதி (வசெ- I) விண்ணப்பிக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் மீது சட்டப்பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு 2013-14ம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக துணை மானிய குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (ஆதி(ம)பந) துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், ஆதிதிராவிடர் நலன் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.50103/ஆதி(ம)பந/2013, நாள் 23.9.2013-ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1325 (ஆயிரத்து முந்நூற்று இருபத்தைந்து)

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
இயக்குநர், துவக்கப்பள்ளிகள் துறை, சென்னை-6.
இயக்குநர், பள்ளிக்கல்வித்துறை, சென்னை-9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்,
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
மாநிலக் கணக்காய்வு தலைவர், சென்னை-6/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5/35/6.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
<u>நகல்:-</u>
நிதித் (வசெ-I & II / (ஆதி(ம)பந) துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வித்துறை, சென்னை-9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-5.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின்
அனைத்துப் பிரிவுகள், சென்னை-5.
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

25/9/13
பிரிவு அலுவலர்.
25/9/13